1972 டிசம்பர் 14]

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தேர்தல் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய சுவரொட்டியைத்தான் தனியார் பஸ்களில் விளம்பரப் படுத்துகிருர்கள். இது மற்றக் கட்சிகளுக்கு வேதனையை அளிக்கிறது. ஆகவே இதைத் தவிர்க்க அரசு தக்க உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக தனியார் பேருந்துகளில் விளம்பரம் செய்வதற்குப் போக்குவரத்துத் துறையினுடைய அனுமதி தேவை. அப்படி எழுதுவது விளம்பரம் செய்வது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மட்டும் தான் இடம் தருவோம் என்று புகார் வந்தால் அந்தப் புகாரின் மீது அரசாங்கப் போக்குவரத்து ஆர். டி. ஓ. இலாக்கா நடவடிக்கை எடுக்க நிச்சயமாக அதிகாரம் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : இந்த மன்றத்தில் இருக்கிற ஒரு உறுப்பினர், நடிகர் அவருடைய படம் சில பஸ்களில் விளம்பரமாக வருகிறது. அந்த விளம்பரத்திற்காக இந்த அரசிற்கு வருமானம் உண்டா அல்லது இழப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் யாரும் இடம் மாறி உட்காரக் கூடாது.

Mylapore, Thyagarayanagar bus terminals

* 180 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that space at the T. Nagar and Mylapore Transport Terminus buildings have been rented out to private parties ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) தியாகராய நகர் பேருந்து நிலையத்தில் நான்கு கடைகளும், மந்தைவெளி பேருந்து நிலையத்தில் நான்கு கடைகளும் உள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்ட பின்னர் இந்தக் கடைகள் தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டன. மயிலாப்பூரில் பேருந்து நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் கடைகள் எவையும் இல்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இதனல் கிடைக்கக் கூடிய வருமானம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தியாகராய நகரைப் பொறுத்தவரையில் நாலு ஸ்டால்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 600 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மந்தைவெளியில் உள்ள நாலு கடைகளில் இரண்டு கடைகளை வாடகைக்கு எடுக்க யாரும் இன்னும் முன்வரவில்லை. மீதி இரண்டு கடைகளின் மூலம் 330 ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் * வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) தகவல் கோரல்.

(அ) பேரவைத் துணைத் தலைவர் மீது கொடுக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Chair when the no-confidence motion against you is scheduled to be taken up ? Will there be any special session or are we extending the session? That is a matter which you may please let us know.

DR. H. V.HANDE : We were told in the Business Advisory Committee that we are going to meet on 15th also and that would be the last day. Notice for no-confidence motion against the Deputy Speaker has been given. I understand that the 14 days ' notice actually expires on 22nd or so. If that is the case, will the Hon. Deputy Speaker or Hon. Leader of the House give us an indication whether we are going to meet again on 22nd to dispose of this particular motion, or whether it is possible for the Hon. Deputy Speaker to waive some of the rules and have it earlier, if possible on 15th. The Hon. Chief Minister also gave us an indication sometime ago that he would place on the table of the House the reply with regard to the number of charges that were given to the Hon. President of India by some members. . . .

MR. DEPUTY SPEAKER : One issue at a time. With regard to the ' removal motion ' I would like to state that the 14 days notice has not expired. Dr. Hande had raised the point whether we cannot waive it. But let me state that it is a consti-